பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தொடங்கியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 11உ (27—11—67) திங்கள் வெளியூர்: கார்த்திகை 12உ (28—11—67) செவ்வாய் [இதழ்: 137

வில்சன் வெளியேற்றப்படுவார்

பவுன் மதிப்பைக் குறைத்ததால் பதவி பறிக்கப்படலாம்

"தொழிற்கட்சியின் நடுநிலை—வலதுசாரிக் கருத்துடைய உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து இங்கிலாந்து தலைமையமைச்சர் வில்சனை, நிர்வாகப் பொறுப்பிலிருந்து வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்

(3-ம் பத்தி பார்க்க)

மக்களை மனிதர்களாக மதிக்கிறேன்!

'ஓட்டர்'களாக மட்டுமே கருதுகிறார்கள் காங்கிரசார்!

'கணக்குக் கேட்கும் 'கண்ணியவான்'கள் ஏழைகளுக்குச் செய்த நன்மை என்ன?'--எதிர்க் கட்சியினருக்கு அண்ணா அறைகூவல்

சென்னை, நவ. 27—

தங்களுடைய இருபதாண்டு ஆட்சிக் காலத்தில் குடிசைவாழ் மக்களுக்குச் செய்யவேண்டியதைச் செய்யத் தவறிய காங்கிரசார், இன்று தி.மு.க. ஆட்சியில் செய்யும் நல்ல காரியத்துக்கும் களங்கம் கற்பிக்கும் வகையில், 'முதலமைச்சர் நிதி' பற்றிக் கணக்குக் கேட்க முனைந்திருப்பது குறித்து அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிடுகையில், 'கணக்குக் காட்டத் தயார்' என்று அறிவித்திருப்பதுடன், நிதிக்கு ஆளுக்கு ஐந்து ரூபாய் கொடுக்கத் தயாரா?' என்று வினவி, அறைகூவல் விடுத்திருக்கிறார்.

"இதுவரையில் குடிசைப் பகுதிகளில், தீப்பிடிக்காத கூரைகளைக் கொண்ட கெட்டிக் கட்டிடங்களைத் தயாரிக்கும் பணிக்கென்று ரூ. 33 இலட்சம்வரையில் பொதுமக்கள் நன்கொடை வழங்கியுள்ளனர்.

"தேர்தல் நேரத்தில் காங்கிரசுக்காரர்கள், 'இந்த நிதி என்னவாயிற்று? எங்கே கணக்கு?' என்று கேட்டார்கள்; இடைத் தேர்தல் என்பதால் அப்போது நான் அது குறித்துப் பேசவில்லை.

"இதற்குமுன் இவர்கள் ஆட்சியிலிருந்த காலத்தில், பலமுறை நிதி வசூலித்திருக்கிறார்கள்; ஒரு நாளும், 'ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க நிதி வசூலிக்கவேண்டும்' என்ற எண்ணம் மதிப்பிற்குரிய பக்தவத்சலத்துக்கோ, சுப்பிரமணியத்துக்கோ, ஏழை பங்காளர் காமராசருக்கோ ஏற்படவில்லை!

"இதற்குமுன்னும் இவர் காலத்தில், தீ விபத்துக்கள் நடந்துள்ளன; ஒவ்வொரு முறையும், 'கோடம்பாக்கத்துக்குச் செல்லுங்கள்; அங்கே இடமில்லாவிட்டால், ஆவடி–அம்பத்தூருக்குச் செல்லுங்கள்' என்றுதான் குடிசைவாழ் மக்கள் அனுப்பப்பட்டார்கள்!

"குடி மனை ஒதுக்கி—குடும்பத்துக்கு ஒரு கட்டிடமாகக் கடந்த 10—15 ஆண்டுகளில் இவர்கள் கட்டித் தந்திருந்தால், இன்றையத்தினம் சென்னை நகரில் ஒரு குடிசைகூட இருந்திருக்காது; ஆனல் அவர்கள் இதைச் செய்யவில்லை! அவர்கள் செய்யாததால், 'நாமும் செய்யத் தேவையில்லை' என்ற எண்ணம் எனக்கு இல்லை!

"'உங்களை யார் குடிசைவாசிகளுக்கு வீடு கட்டித் தரச் சொன்னது? யார் கேட்டார்கள்—எதற்காகப் படி அரிசி போடுகிறீர்கள்? போட்டுவிட்டு, 'பணம் போதவில்லை; மத்திய அரசு கொடுக்கவேண்டும்' என்று கேட்கிறீர்களே—இது நியாயமா?' என்று காங்கிரசுத் தலைவர்கள் கேட்கிறார்கள்!

"குடிசைகள் பற்றி எரிந்து தங்கள் உடைமைகளெல்லாம் கருகிப்போனபின் நிராதரவாக நடுத்தெருவில் மக்கள் நின்றார்களே—அவர்களைப் பார்த்த என் நெஞ்சம் கேட்டது!

"'முதலமைச்சராக ஆகி இருக்கிறாயே—அந்த ஏழை மக்களின் துயரைத் துடைக்க ஏதாகிலும் செய்யக்கூடாதா' என்று என் இதயம் கேட்டது; அதைச் செய்வதைக் காட்டிலும் எனக்கு வேறென்ன திருப்தி இருக்கமுடியும்? இங்கிலாந்தின் தூதர் கரத்தைக் குலுக்குவதில் கிடைக்காத திருப்தி—அமெரிக்கத் தூதர் அளிக்கின்ற விருந்தினல் ஏற்படாத மனத்திருப்தி—ஆஸ்திரேலியத் தூதர் கரம் பிடித்துக் குலுக்கினல் ஏற்படாத திருப்தி—'ஏதோ வந்தான்; நல்லது செய்தான்' என்று ஏழை மக்கள் கூறிடும் அந்நேரத்தில்தான் எனக்கு ஏற்படும்.

"நான், மக்களை மனிதர்களாக எண்ணிக்கொண்டிருக்கிறேன்; காங்கிரசுத் தலைவர்கள், மக்களை, 'ஓட்டர்'களாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்! ஓட்டுப் போட்டால் சரி—இல்லையேல் அந்த மக்களைப் பற்றி அவர்கள் கவலைப்படமாட்டார்கள்!

"மக்கள் எனது வேண்டுகோளை ஏற்று இதுவரையில், ரூ. 33 இலட்சம் கொடுத்திருக்கிறார்கள்; இதில் ஆறேழு இலட்சம் அளவுக்குக் கெட்டிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன; மீதிப் பணம் அரசுப் பொறுப்பில் இருக்கிறது.

"'கணக்குப் பார்க்க வேண்டும்' என்று பொறுப்புள்ள காங்கிரசுத் தலைவர்கள் விரும்புவார்களானல், வசூலாகியுள்ள பணம்—இதுவரை ஆன செலவு—மீதம் ஆகியவை பற்றிய கணக்கைப் பார்க்கலாம்; அனைவருமே பார்க்க விரும்பினலும் சரி—ஒரு வழி செய்யலாம்; கணக்கைப் பார்ப்பதற்குமுன் ஒவ்வொருவரும் தலைக்கு ரூ. 5 வீதம் நன்கொடையாக இந்த நிதிக்குக் கொடுக்கலாம்; கணக்கைச் சரி பார்த்த திருப்தி அவர்களுக்கு ஏற்படும் அதேநேரத்தில், ஏழை எளிய மக்களுக்குத் துணை செய்வதற்கு நன்கொடையும் கிடைக்கும்!

"'ரூ. 5 கொடுக்க முடியாது' என்று எவரேனும் சொல்வார்களானல், அவர்களும் பார்க்கட்டும்; ஆனல், நன்கொடை கொடுக்கத் தன்னிடம் பணமில்லை என்று சொல்லும் இவர், கணக்கை மட்டும் பார்க்க விரும்புகிறார்' என்பதை மட்டும் மக்களிடம் எடுத்துக்கூற எனக்கு அனுமதிதர வேண்டும்."

காதில் விழுந்தது!

"முழுப் பூசணிக்காயை ஒரு சோற்றுப் பருக்கையில் திணிக்கமுடியுமா?'

"'முடியாது' என்ற நினைப்பில் கேட்கிறாப் போலிருக்கிறது! நன்றாக முடியும்! பதினேழு பேர் மட்டுமே உள்ள பி. சி. கோஷின் புதிய கட்சிக்கு 130 உறுப்பினர்களைக் கொண்ட வங்காளத்துக் காங்கிரசு ஆதரவு தந்திருக்கிறதே! சனநாயகப் படி தவறோ சரியோ—சனநாயக அமைப்பில், பூசணிக்காயைச் சோற்றுப் பருக்கையில் திணிப்பதென்ன — விளைவிக்கவே முடியும்!

'காமராசரின் திறமையின்மையே மாநில காங்கிரசுக் கட்சிகளின் தான்தோன்றிப் போக்குக்குக் காரணம்'

'அவர் ஓர் ஊமைத் தலைவர்' என அழைக்கப்பட்டது முற்றிலும் பொருத்தமே'

'பார்க்கலாம்' என்ற போக்கு பதவிக்கே இழுக்கு'---'ஸ்டேட்ஸ்மன்' இதழின் கண்டனம்

"பல மாநிலங்களிலும் காங்கிரசுக்காரர்கள், தான்தோன்றிப் போக்கில் நடப்பதற்கும், அரசியல் முறைகளை—வரம்புகளைக் கடந்து செல்வதற்கும், காமராசரின் திறமையற்ற தலைமையே காரணம்"

என்று, 24—11—67 'ஸ்டேட்ஸ்மன்' இதழில் பிரபல அரசியல் விமர்சகர் திலீப் முகர்ஜி வரைந்துள்ள கட்டுரையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

கல்கத்தா நிலைமைகள் பற்றி அவர் எழுதியுள்ள அக்கட்டுரையில் காமராசர் பற்றி வந்துள்ள பகுதியாவது:—

"மாநிலக் காங்கிரசுகளின் தவறுகள் பற்றி காங்கிரசு மேலிடத்தில் ஒரு கட்டுப்பாடு இல்லாமல் போனதற்குக் காரணம், காமராசரின் தனிப்பட்ட திறமைக் குறைவே ஆகும்.

கோபமடைந்த வங்காளத்துக் காங்கிரசுக்காரர் ஒருவர், அவரை ஓர் 'ஊமைத் தலைவர்' என அழைத்ததில் தவறு ஏதும் இல்லை; அவர் அப்படிப்பட்டவர்தான் என்பதை மெய்ப்பிக்க உதாரணம் ஏதும் தேவையுமில்லை (அவர் ஒரு 'ஊமை'தான்!).

'பார்க்கலாம்' என்று சொல்லி அமைதி காட்டுவது, அவருக்கு ஒரு தத்துவமாகி விட்டது!

மேற்கு வங்க நிலைமைகளில் காங்கிரசார் போக்கு பற்றி அவர் நடவடிக்கை ஏதும் எடுக்காத போக்கு, அவரது தலைமைப் பதவிக்கே ஓர் இழுக்கினைத் தேடித் தந்துவிட்டது! வங்காளத்துக் காங்கிரசுக்காரர்களின் அத்துமீறிய நடவடிக்கைகளுக்கு, அவரது மௌனப் போக்கே இடம் கொடுத்துவிட்டது!

வங்காளம் பற்றி மத்திய அரசு எடுத்த முடிவில், 'கட்சித் தலைவர்' என்ற முறையில் காமராசர், தவறினை தடுத்து நிறுத்தியிருக்கலாம்; ஆனல் அவரும் தவறிவிட்டார்!"

(5-ம் பத்தி தொடர்ச்சி)

கின்றனர்; அவருக்குப் பதிலாக நிதித் துறைப் பொறுப்பாளர் ஜேம்ஸ் கலகான் தலைமையமைச்சராக ஆக்கப்படலாம்"

என்ற ஒரு யூகத்தினை இலண்டன் கிழமை இதழ் 'சண்டே டைம்ஸ்' தந்திருக்கிறது.

"பெரும் வியாபார நிறுவனங்களும், மாற்றத்துக்குப் பக்கபலமாக இருக்கின்றன" என்றும் நம்பப்படுகிறது.

ஆட்டுவிக்க ஓர் அதுல்யா கோஷ்--ஆடுகிறார் டாக்டர் கோஷ்!

சனநாயக முன்னேற்றக் கட்சிக்கு காங்கிரசு ஆதரவு--நவ. 29-ல் சட்டமன்ற பலப்பரீட்சை!

டாக்டர் பி. சி. கோஷ் தலைமையில் வங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவைக்குக் காங்கிரசு, 'நிபந்தனை ஏதுமற்ற முழு உதவியும் அளிக்கத் தயார்' என்ற அறிவிப்பை, கல்கத்தாவில் அதுல்யா கோஷ் தெரிவித்திருக்கிறார்.

17 உறுப்பினர்களுடன் அஜாய் முகர்ஜியின் ஐக்கிய முன்னணி அமைச்சரவையிலிருந்து விலகிய டாக்டர் கோஷ், 130 உறுப்பினர்கள் கொண்ட மன்ற காங்கிரசுக் கட்சியின் ஆதரவினைப் பெற்று,

(4-ம் பக்கம் பார்க்க)

காதில் விழுந்தது !

"பாதுகாப்பு அமைச்சர் காமராசரைச் சந்தித்தாராமே ?"

"ஏதோ ஓர் உட்போருளுடன் கேட்கிருப்போலிருக்கிறதே! வேண்டாம் வம்பு! ஏற்கனவே 'மிலிட்டேரி' பிரியராக நாடாளுமன்றம் வரையில் அறிமுகமாகியிருக்கிறார் காமராசர்! பஞ்சாப் மாநிலக் காங்கிரசு பற்றிப் பேசுவதற்காகத்தான் சுவரண் சிங் சென்றிருப்பார் - 'பாதுகாப்பு அமைச்சர்' என்ற முறையிலல்ல !"

பொறுப்பற்றவர்களின் தவறான பிரசாரம்

காங்கிரசு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு அண்ணா பதில்

சென்னை, நவ. 25—

"தமிழக அரசின் சில பதவிகள் நீக்கப்பட்ட போதிலும் யாரும் வேலை இழக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன்; இருந்தாலும், 'நாம் வேலை இழந்துவிடுவோமோ' என்ற அச்சம் அதிகாரிகளிடையே நிலவி வருகிறது; இதைப் போக்கத்தக்க வகையில் முதலமைச்சர் உறுதிமொழி அளிப்பாரா ?"

என்று சட்டமன்றத்தில், திரு. கே. விநயகம் கேட்டார்.

அதற்கு முதலமைச்சர் அண்ணா பதிலளுக்கையில் கூறியதாவது:—

"இத்தகைய அச்சம் அதிகாரிகளிடையே நிலவுவதற்குக் காரணமே, பொறுப்பற்றவர்கள் செய்துவரும் தவறான பிரசாரம்தான்."

தலைமைச் செயலகத் துறைகள் சீரமைப்பு

தக்க நேரத்தில் செய்யப்படும்

சென்னை, நவ. 24—

"தமிழக அரசின் தலைமைச் செயலகத்தின் துறைகளைச் சீரமைப்பதற்கான திட்டம் எதுவும் இப்போது இல்லை; இதுபற்றித் தக்க நேரத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்"

(4-ம் பக்கம் பார்க்க)

நாள்தோறும் 1,60,000 பேர்!

மக்கட்தொகையில் பெருக்கம்

இலண்டன், நவ. 27—

உலகின் மக்கள்தொகை இப்போதுள்ள விகிதத்தில் அதிகரித்துச் செல்லுமானால், 40 ஆண்டுகளில் இப்போது உள்ளதைப் போன்று இரண்டு மடங்காகிவிடும்.

இப்புள்ளிவிவரங்கள் வழக்கமானவையே; எனினும், 'அந்த நிலைமை, எதிர்காலத்தில் எப்போதோ ஏற்படப் போவதாகும்' என்று அப்புள்ளிவிவரங்கள், சில சமயங்களில் மெத்தனத்தை உண்டாக்கிவிடலாம்.

அதே புள்ளிவிவரங்களை வேறு வகையில் கவனித்தால், மக்கள் தொகை அதிகரிப்பின் பயங்கரம் மிகத்தெளிவாகப்படுகிறது. இன்று நீங்கள் இக்கட்டுரையைப் படிக்கும் நேரத்திலிருந்து நாளை இதே நேரத்துக்குள்—24 மணி நேரத்தில் உலகில் மேலும் 1-இலட்சத்து 67 ஆயிரம் பேர் வந்துவிடுவர். உணவு உற்பத்தி அந்த வேகத்தில் அதிகரிப்பதில்லை என்பதால் ஏற்கனவே பற்றுக்குறையாக உள்ள உலகின் உணவு வளத்தில் அந்த அத்தனைப்பேரும் பங்குக்கு வந்துவிடுகின்றனர். இப்படிப் பங்குக்கு வருவோரின் தொகை ஒவ்வொருநாளும் பெருகிக்கொண்டே போகிறது. உலகின் மக்கள் தொகை அதிகரிப்பு அந்த அளவுக்கு உள்ளது.

உதாரணமாக, கடந்த 12 மாத காலத்தில் உலகின் மக்கள் தொகை 6 கோடியே 10 இலட்சம் அதிகரித்து, எப்போதும் இல்லாத வகையில் 335கோடியே 60இலட்சமாக உயர்ந்துவிட்டது!

மதுரையில் புதிய நீதிமன்றக்கட்டிடம்

ரூ. 35 இலட்சம் செலவில் திட்டம்

"மதுரையில் நீதிமன்றக் கட்டிடம் கட்டுவதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுவிட்டது; ரூ. ரூ. 35 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டப்படும்; தற்போது நீதிமன்றங்கள் இயங்கும் திருமலை நாயக்கர் மகால் பழுதுபட்டிருப்பதால், புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதும், எல்லா நீதிமன்றங்களும் புதிய கட்டிடத்துக்கு மாற்றப்பட்டு, திருமலை நாயக்கர் மகாலை, பொதுமக்கள் பார்வைக்கென பழுது பார்த்து வைக்கப்படும்"

என்று சட்டமன்றத்தில், சட்ட அமைச்சர் செ. மாதவன் தெரிவித்தார்.

ஏழு நாட்கள் எழில்மிகு திருவிழா

கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் காட்சி அமைப்பு

தரணி போற்றும் தமிழறிஞரெல்லாம் தமிழகத்துக்கு வருகை

உலகத் தமிழ் மாநாட்டு ஏற்பாடுகள் — அமைச்சர் கருணாநிதி வெளியிடும் விவரம்

சேன்னை, நவ. 23—

பொதுப் பணித் துறையமைச்சரும், உலகத் தமிழ் மாநாட்டுப் பொதுத் தொடர்புக் குழுத் தலைவரும், மாநாட்டுச் செயற்குழுத் துணைத் தலைவருமான திரு. மு. கருணாநிதி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகத் தமிழ் மாநாட்டு ஏற்பாடுகள் குறித்துப் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது:—

ஊர்வலம்

தற்போதுள்ள ஏற்பாட்டின்படி, தமிழ் வரலாற்றுப் பண்பாட்டினை விளக்கும் அலங்கரிக்கப்பட்ட வண்டிகள், ஜலண்டுத் திடலில் வந்து கூடும்; பிற்பகல் 2-மணிக்கு ஊர்வலம் துவங்கும்.

அந்த ஊர்வலத்தில் பழங்கால இலக்கிய ஏடுகளும், சங்க காலத்துக் காட்சிகளும், தமிழப் பெரும் புலவர்களான திருவள்ளுவர்—இளங்கோ—கம்பர் திருப்பாவை பாடிய ஆண்டாள் முதலியவர்களின் திருவுருவங்களும் இடம்பெறும்; இவற்றிற்கான ஏற்பாடுகளை, கலைத் துறையினர் செய்துவருகின்றனர்.

மவுண்ட்ரோடு — ரவுண் டானா —ஜெமினி சதுக்கம்—எட்வர்ட் எல்லியட்ஸ் ரோடு சென்று, ஐ. ஜி. அலுவலகம் வழியாக வடக்கே திரும்பி—மெரினா கடற்கரையை ஊர்வலம் அடையும்.

பல்கலைக்கழகக் கட்டிடத்திற்கு எதிரில் அந்த அலங்கார வண்டிகள் இரவு 11-மணிவரை நிறுத்தப்படும்; பொதுமக்கள் அந்த வண்டிகளைப் பார்வையிடலாம்.

துவக்க விழாக் கூட்டம்

உலகத் தமிழ் மாநாட்டின் துவக்க விழாக் கூட்டம், சன. 3-ம் நாள் மாலை 5-30 மணியளவில் ஐ. ஜி. அலுவலகத்திற்கு எதிரேயுள்ள கடற்கரையில் துவங்கும்; இந்தக் கூட்டத்திற்குப் பொதுப் பணித் துறையினரும், போலீசுத் துறையினரும் சீரிய ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

மாநாட்டுக்கு வருகை தரும் இந்தியக் குடியரசுத் தலைவரும், அயல் நாட்டுப் பிரதிநிதிகளும், ஊர்வலத்தை ஐ. ஜி. அலுவலகத்திலிருந்து கண்டுகளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

துவக்க விழாவிற்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்குவார்; இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் மாநாட்டைத் துவக்கி வைப்பார்.

கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், வரவேற்புக் குழுச் சார்பில் அனைவரையும் வரவேற்றுப் பேசுவார்.

செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, தமிழகத்துப் பெண்கள் சார்பில் அனைவரையும் வரவேற்பார்.

மலர்க் குழுச் சார்பில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசுவார்.

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த இந்தியத் துறைத் தலைவர் டாக்டர் பிலியோசட், உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகச் சார்பில் அயல் நாட்டு அறிஞர்களை வரவேற்றுப் பேசுவார்.

உலகத் தமிழ் ஆராய்ச்சிக் குழு மாநில இயக்குநர் சுப்பையா, வாழ்த்துச் செய்திகளைப் படித்து அயல் நாட்டுப் பிரதிநிதிகளை அறிமுகம் செய்துவைப்பார்.

சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் திருக்குறள் நிறுவனம் ஏற்படுத்துவதற்கான காசோலை (செக்)களை முறையே பொதுப் பணி அமைச்சர் மு. கருணாநிதி, உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி ஆகியோர் வழங்குவர்.

மாநாட்டு மலரை மாநில கவர்னர் உஜ்ஜல் சிங் வெளியிடுவார்.

இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் இசை விருந்து அளிப்பார்.

மாநாட்டுச் செயலாளர் ஏ. ஆர். பெருமாள் முதலியார் நன்றி உரை நவில்வார்.

ஆராய்ச்சிக் குழுக் கூட்டம்

டாக்டர் பிலியோசட், தமிழ் ஆராய்ச்சிக் குழுக் கூட்டங்களுக்கு தலைமைவகிப்பார்; அக்குழுக் கூட்டங்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் சனவரி 4-ம் நாளிலிருந்து நடைபெறும்.

கலை நிகழ்ச்சிகள்

ஆராய்ச்சிக் குழுக் கூட்டங்கள் நடைபெறும் அதே வேளையில், பொதுக்கூட்டங்களும், கலை நிகழ்ச்சிகளும், ஜலண்டு திடலில் நடைபெறும்; புகழ் பெற்ற ஆராய்ச்சியாளர்களும், அரசியல் தலைவர்களும் கலைஞர்களும் அந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்பர்; இந்த நிகழ்ச்சிகள், ஒவ்வொரு நாளும் மாலை 3 மணியிலிருந்து தொடங்கி இரவு 9 மணிவரை நடைபெறும்.

மாநாடு நடைபெறும் ஒரு வார காலத்தில், சென்னைக்கு வரும் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மாநாட்டையொட்டி கண்காட்சி பற்றியும், வளைவுகள்—சிலைகள் திறப்பு விழா பற்றியும் தனி அறிக்கை வெளியிடப்படும்.

இந்த மாநாடு நடைபெறும் காலத்தில் ரம்ஜான் பண்டிகையும் வருவதால், குடியரசுத் தலைவர் தமது ஈத் தொழுகையைச் சென்னையில் நடத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டிற்கான அழைப்பிதழ்கள், தமிழக அரசாங்கத்தின் சார்பில் அனுபப்பெறும்.

சிறப்பு அஞ்சல் தலை

சென்னை, நவ. 23—

உலகத் தமிழ் மாநாட்டு நினைவாகச் சிறப்பு அஞ்சல் தலை வெளியிட மத்திய அஞ்சல் துறை அமைச்சர் ராம் சுபாக் சிங் ஒப்புதலளித்துள்ளதாக முதலமைச்சர் அறிஞர் அண்ணாவும், பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதியும் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

குழந்தை உணவுத் தொழிற்சாலை

திட்டம் குறித்து அமைச்சர் விளக்கம்

சென்னை, நவ. 24—

"குழந்தைகள் உணவு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளதா ?"

என்று சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் ஏ. எம். இராசா கேட்ட கேள்விக்கும் பதிலளிக்கையில், தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்ததாவது :—

"குழந்தை உணவுத் தொழிற்சாலை ஒன்றைத் துவக்குவது பற்றி 1957 முதலே அரசு அக்கறை காட்டி வந்திருக்கிறது; அப்படி ஏற்படுத்தினால், அதற்கு நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பால் தேவைப்படும்; இந்தத் தேவையை நிறைவு செய்வது எப்படி என்பதுதான் பிரச்சினையாக உள்ளது.

"டென்மார்க்கில் உள்ள ஒரு கூட்டுறவுப் பண்ணை கடன் உதவியும், தொழில் நுட்ப உதவியும் அளிக்க முன்வந்தது; ஆனால், அது பிறகு பின்வாங்கிவிட்டது.

"இப்போது வேறொரு நிபுணர், திட்டமொன்றைத் தெரிவித்திருக்கிறார்; இதற்கு ரூ. 169 இலட்சம் செலவாகும்; இத்திட்டம் பரிசீலனையில் உள்ளது; இதற்கு இருபதாயிரம் ஏக்கர் நிலமும் தேவை.

"சென்னை நகருக்கு மட்டும் ஒரு நாளைக்கு 75,000 லிட்டர் பால் தேவைப்படுகிறது; ஆனால் கிடைப்பதோ 30,000 லிட்டர் தான்; அதுவும் ஈரோட்டிலிருந்தும், மற்றும் வெளியூர்களிலிருந்தும் வருகின்றன; இந்த நிலையில், கிடைக்கின்ற பாலை, குழந்தை உணவுத் திட்டத்துக்குத் திருப்பினால் ஏற்படக்கூடிய நெருக்கடியைச் சமாளித்தாக வேண்டும்; எல்லாவற்றையும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது."

பதுக்கல் தடுப்பு நடவடிக்கை

சென்னை, நவ. 24—

"உணவுப் பொருள் பதுக்கலைத் தடுக்க மாநிலம் முழுவதும் அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது; இந்தப் புதிய அரசு பதவியேற்ற 6—3—67 முதல் 25—5—67-வரை ரூ. 13,03,846 மதிப்புள்ள உணவுத் தானியங்கள் பறிமுதல் செய்யப்பட்டது; 303-பேர் கைது செய்யப்பட்டனர்; 256 வழக்குகள் தொடரப்பட்டன"

என்று வேளாண்மை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, சட்டமன்றத்தில் அறிவித்தார்.

கொள்முதல் விலை-அமைச்சர் விளக்கம்

சென்னை, நவ. 24—

'தமிழக அரசு தரும் கொள்முதல் விலை, சரியானதே' என்று மத்திய உணவமைச்சர் திரு. செகசீவன்ராம் அவர்களே தெரிவித்திருப்பதை, சட்டமன்றத்தில், எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் கேள்விக்குப் பதிலளிக்கையில் வேளாண்மை அமைச்சர் திரு. கோவிந்தசாமி சுட்டிக்காட்டினார்; அவர் மேலும் தெரிவித்ததாவது :—

"விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் விலை குறைவுதான் என்பதை அரசு உணர்ந்துள்ளது; என்றாலும், 'இலாபத்தில் குறைவு' என்றுதான் அவர்கள் கஷ்டப்படுகிறார்களே தவிர, 'நஷ்டம்' என்று சொல்வதற்கில்லை; என்றாலும், அவர்களுக்கு உற்பத்திச் செலவு குறையும் வகையில் பல வசதிகளை அரசு செய்து கொடுத்துள்ளது.

"இரண்டாம் போக சாகுபடிக்குத் தண்ணீர்த் தீர்வையை ரத்து செய்துள்ளது; பூச்சி மருந்துக்கு 35 சதவிகிதம் கடன் கொடுக்கிறது; மற்றும் அதிகாரிகளை, விவசாயிகளுக்குத் தேவையான ஒத்துழைப்புக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறோம்; மேலும் பல வசதிகளையும் செய்து கொடுக்க முயற்சி செய்துவருகிறோம்."

விமான மூலம் பூச்சி மருந்து தெளிப்பு

'மூன்று மாவட்டங்களில் வெற்றிகரமாக நடந்திருக்கிறது'

சட்டமன்றத்தில் அமைச்சர் கோவிந்தசாமி விளக்கம்

சென்னை, நவ. 25—

"பூச்சிகளால் பாதிக்கப்படுகிற பயிர்களுக்கு விமானங்களைக் கொண்டு வானிலிருந்து பூச்சிக் கொல்லி மருந்துகளையும், பிற மருந்துகளையும் தெளிக்கும் திட்டம், கோவை—தென்னாற்காடு—நெல்லை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது; இதற்காகும் செலவில் (விமானக் கட்டணம்) மூன்றில் இரண்டு பங்கை மத்திய அரசும், மூன்றில் ஒரு பங்கை விவசாயிகளும் ஏற்கின்றனர்: பூச்சிக் கொல்லி மருந்துக்கான செலவில் 35 சதவிகிதத்தை மாநில அரசும், 65 சதவிகிதத்தை விவசாயிகளும் ஏற்கின்றனர்"

என்று வேளாண்மை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி, சட்டமன்றக் கேள்வி நேரத்தில் விளக்கினார்.

மேலும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளித்ததாவது :—

"விமானத்தைச் சொந்தமாக வாங்கும் அளவுக்கு மாநில அரசின் வேளாண்மைத் துறைக்கு நிதி வசதி இல்லையாதலால், விமானக் கம்பெனியிடம் வாடகைக்கு விமானம் அமர்த்தப்படுகிறது.

"விமானம் மூலம் மருந்து தெளிப்பதில் எவ்விதச் சங்கடமும் ஏற்படுவதாக யாரும் இதுவரை கூறவில்லை. எங்தெந்த இடங்களில் பூச்சி மருந்து தெளிக்க வேண்டும் என்று நிபுணர்களின் ஆலோசனை கேட்டுத்தான் தெளிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் ஒருவித புதுப் பூச்சி அரிப்பு ஏற்பட்டது; உடன், ஆடுதுறை ஆராய்ச்சி நிறுவனத்தார் அதைக் கண்டறிந்து, தக்க நடவடிக்கை எடுத்து, அது மேலும் பரவாமல் தடுத்துவிட்டனர்."

‘பெற்ற வெற்றிக்கு பெரும் விலை கொடுத்தாகவேண்டும்’

‘குறுகிய நோக்கம் படைத்தவர்களே மகிழ்ச்சியடையக்கூடும்’

மேற்கு வங்க சனநாயகப் படுகொலைபற்றி ‘டெக்கான் ஹெரால்டு’

“மேற்கு வங்காளத்தில் காங்கிரசல்லாத அமைச்சரவை ‘டிஸ்மிஸ்’ செய்யப்பட்டுவிட்டதனுல், காங்கிரசிலுள்ள குறுகிய நோக்கம் படைத்தவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படக்கூடும்; ஆனுல், 1959-ல் கேரளத்தில் பெற்ற அனுபவத்திற்குப் பிறகு, மறுபடியும் சனநாயக வேள்வியில் கம்யூனிஸ்டுகளைத் தியாகிகளாக்கி, தான் பெற்றுள்ள வெற்றிக்காகக் காங்கிரசு மிகப் பெரிய விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும்!

“இந்த மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் தலையீடு தேவைதான் என்றிருந்திருந்தால், குல்சாரிலால் நந்தாவின்முயற்சிதோற்ற தருணத்திலேயே, மேற்கு வங்க முதலமைச்சர் தந்திருந்த அறிக்கையின்மீது இதைச் செய்திருக்கலாம்.

“பலப்பரீட்சை செய்வதற்காகச் சட்டமன்றத்தைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட தேதிக்கு இரண்டு வாரங்கள் முன்பாக அதனைக் கூட்ட மறுத்த ஒரே காரணத்திற்காக, அந்த அமைச்சரவையை ‘டிஸ்மிஸ்’ செய்தது சரியா என்பதுதான் இப்பொழுதுள்ள கேள்வி.

“அமைச்சரவை, ‘பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது’ என்று தெரிந்தபிறகும், 23 நாட்கள் பொறுக்க முடிந்த கவர்னரால், இன்னும் 15 நாட்கள் ஏன் பொறுத்துக்கொள்ள முடியவில்லை என்பது நமக்குப் புரியவில்லை!

“ஐக்கிய முன்னணியை விட்டு வெளியேறியவர்கள், எங்கே மறுபடியும் திரும்பிப் போய்விடுவார்களோ என்ற அச்சத்தினுல்தான், இப்படிச் செய்யப்பட்டுள்ளது என்ற சந்தேகத்தைத்தான் இது எழுப்புகிறது.

“‘வேலைநிறுத்தங்களின் போது மத்திய அரசுக்கு உட்பட்ட அலுவலகங்களையும், தொழிற்கூடங்களையும் மாநில அரசின் போலீசுப் பாதுகாக்கத் தவறினுல், அரசியல் சட்டத்தின் 355-வது பிரிவின்படி குடியரசுத் தலைவரின் ஆட்சியைக் கொண்டுவரவேண்டியிருக்கும்’ என்று அண்மையில் மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையைப் போல், எல்லா மாநிலங்களிலும் காங்கிரசுக் கட்சியின் ஆட்சி நடந்து வந்தபோது—குறிப்பாக மகாராட்டிர மாநில அமைப்பின் போதும், மொழிவழி மாநில அமைப்பின்போதும் தமிழகத்தில் நடந்த கிளர்ச்சிகளின் போதும் மத்திய அரசு எவ்விதச் சுற்றறிக்கையையும் அனுப்பியதாகத் தெரியவில்லை; எனினும், காங்கிரசல்லாத அமைச்சரவைகள் ஆட்சி நடத்திவரும் இந்த நேரத்தில் இதை அனுப்பவேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்பதும் விளக்கப்படவேண்டிய ஒன்ருகும்.”

கல்வெட்டுக்களில் தூய்மையான தமிழ்ச் சொற்கள்

சான்றுகள் காட்டி விளக்கம்

சென்னைத் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரிச் சார்பில் 14—11—67 மாலை 6-15 மணிக்குச் சென்னை ஏ. ஆர். சி. பள்ளியில், மயிலை சீனிவெங்கடசாமி தலைமையில் கல்வெட்டு அறிஞர் புலவர் இராசு, ‘கல்வெட்டின் வரலாறு’ என்பது பற்றி ஒரு சிறப்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:—

“கல் வெட்டால் நமது நாட்டின் வரலாற்றை சரியான காலத்தைக் கணிக்க முடிகிறது.

பல கல்வெட்டுக்களால் நகரங்களை எப்படி ஆண்டார்கள்—வரிகளை எப்படியெல்லாம் விதித்துத் திரட்டினுர்கள்—அந்த வரிகளை நாட்டு மக்களும் தங்கள் நாட்டு நலனுக்காக எங்ஙனமெல்லாம் கொடுத்து நாட்டை வளப்படுத்தினுர்கள் என்பன பற்றியும், ஒரு மாவட்டத்தை எத்தனை வட்டங்களாகப் பிரித்தார்கள் என்றும். அதனை ஆள 24 கோட்டத்திற்கு 56 உறுப்பினர்களை எம்முறையில் தேர்ந்தெடுத்தார்கள் என்பன பற்றியெல்லாம் செய்திகள் தெரிய வருகின்றன.

அதுமட்டுமல்லால், கோயிலின் மிகுதி வருவாயில் ஓர் ஆற்றுக்கு அணைகட்ட 200 பொன் கடன் பெற்ற செய்தியும், மற்றும் பயிர் விளைச்சல்களுக்குக் கோயில் பணத்திலிருந்து கடனுகப் பெற்று அதற்கு வட்டி கொடுக்கும் செய்தியையும் மிகத் தெளிவாகக் காணப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல், ‘தற்சமயம் கலைச் சொற்களுக்காக நாம் எங்கெல்லாமோ தேடி அலையும் போது சில கல்வெட்டுக்களின் மூலம் தூய்மையான தனித் தமிழ்ச் சொற்கள் காணக் கிடைக்கின்றன’ எனக் குறிப்பிட்டு, மேலும் பல நல்ல கருத்துகளைப் பல சான்றுகளுடன் விளக்கிக் காட்டினுர்.

கல்வெட்டுக்கள் ஆராய்ச்சியில் வல்ல மயிலை சீனி வேங்கடசாமி அவர்களும், கல்வெட்டின் துணையால் அந்தக் காலத்தில் கோயில் மானியங்களின் வாயிலாக சிற்பக் கலை—ஓவியக் கலை—இசைக் கலை—மற்றும் கிராம முன்னேற்றத்திற்கு வேண்டிய பொதுப் பணிகளான மருத்துவப் பணி—கால்நடைகளுக்கு மருத்துவம் முதலிய தொண்டுகளும் நடைபெற்று இருக்கின்றன எனவும், இதுவரை வெளியாகாத பல கல்வெட்டுகளையும் சாசனங்களையும் நாம் விரைந்து வெளியிட்டு நமது வரலாற்றையும், புகழையும், பண்பாட்டின் சிறப்பையும் காக்க வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டார்.

புலவர் கா. சி. தனக்கோடி எம்.ஏ. நன்றி கூறினுர்.

சென்னை மாவட்டச் சீரணியின் தொகுதித் தலைவர்கள்

சென்னை மாவட்டச் சீரணியின் தொகுதித் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள் வருமாறு:—

வண்ணைத் தொகுதி:
சு. வெங்கடேசன் எம்.சி.

துறைமுகத் தொகுதி:
எஸ். வி. சி. லிங்கம்

பேசின்பிரிட்ஜ் தொகுதி:
எத்திராசன்

பூங்கா நகர்த் தொகுதி:
வா. மணிவண்ணன்

பெரம்பூர்த் தொகுதி:
டில்லிராஜ்

புரசைத் தொகுதி:
மைனர் மோசஸ்

எழும்பூர் தொகுதி:
சோ. ம. இராமச்சந்திரன்

ஆயிரம்விளக்குத் தொகுதி:
என். எஸ். நடராசன்

திருவல்லிக்கேணித் தொகுதி:
சி. ஆதிகேசவன்

மயிலைத் தொகுதி:
கே. ரெங்கநாதன்

தியாகராயநகர் தொகுதி:
சுந்தரம்

சைதைத் தொகுதி:
ஆர். டி. பாஸ்கரன் எம்.சி.

முத்துராமலிங்கனுர் பெயரால் கல்லூரி

கமுதியில் ஏற்பாடு

கமுதி, நவ. 10—

பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவர் பெயரால் ஒரு சங்கம் அமைக்க திரு. கே. சங்கரன் தலைமையில் கமுதியில் ஒரு கூட்டம் நடைபெற்றது; அதுபோது சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: கே. சங்கரன்; செயலாளர்: பா. சந்திரசேகரன்; துணைத் தலைவர்: எஸ். தங்கவேல்; துணைச் செயலாளர்—பொருளாளர்: சு. இசக்கியப்பன்.

இச்சங்கம், அரசியல் மத பேதமின்றி கல்வி, சமூக வளர்ச்சிக்குப் பாடுபடுவது என்றும், இச்சங்கத்தின் மூலம் பசும்பொன் முத்துராமலிங்கனுருக்கு நினைவுச் சின்னம் அமைப்பதென்றும, அவர் பெயரால் கல்லூரி ஒன்று கமுதியில் அமைப்பதென்றும், அக்கல்லூரியில் கலை—விஞ்ஞானத்துக்குரிய பாடங்களை கற்பிக்கச் செய்வர் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய்—மான்கூர்டில் தென்னவர் பாதுகாப்புக் கழகத் துவக்கவிழா

பம்பாய்-மான்கூர்டு ஜனதா காலனியில், ‘தென்னவர் பாதுகாப்புக் கழகம்’ என்ற அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதன் துவக்கவிழா, 15—11—67 இரவு 8-30 மணிக்கு டாக்டர் சியாம் பிரசாத் தலைமையில் நடைபெற்றது.

பாதுகாப்புக் கழகத்தின் அலுவலகத்தை முன்னுள் பாதுகாப்பு அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ண மேனன் திறந்துவைத்தார்.

பம்பாய் தி. மு. க. தலைமைக் குழுச் செயலாளர் தொ. து. அன்புச்செழியன், மான்கூர்டு தி. மு. க. கிளைச் செயலாளர் வி. பழனி, மிர்ஜா, வழக்கறிஞர் சங்கரநாராயணன், தொழிற்சங்கத் தலைவர் கே. தே. ஏ. நாயர், சுபேதார், ஏ. அலியாா ஆகியோர் பேசினர்.

விழாவில் விக்ரொலி இராசகோபால், வி. இராமையா ஆகியவர்களும் கலந்துகொண்டனர்.

பேச்சாளர்களுக்குக் கைத்தறி ஆடைகள் மான்கூர்டு தி. மு. க. சார்பிலும், பல அமைப்புகளின் சார்பில் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

முதலமைச்சர் அண்ணு டில்லி செல்கிருர்

சென்னை, நவ. 24—

முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், நவ. 30-ம் நாள் காலை 9-25 மணிக்கு விமானம்மூலம் புதுடில்லிக்குப் புறப்பட்டுச் செல்கிருர்.

டிச. 1, 2-ம் நாட்களில் டில்லியில் நடைபெறவிருக்கும் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு டிச. 3-ம் நாள் சென்னை திரும்புவார்.

அவசியம் ஏற்பட்டால்...!

மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 24—

“இடதுசாரி பொதுவுடைமைக் கட்சியைத் தடை செய்வது பற்றி அரசு இப்போது எதுவும் ஆய்வு செய்யவில்லை; ஆயினும், இந்தக் கட்சி உறுப்பினர்களின் நடவடிக்கைகள் எச்சரிக்கையாகக் கண்காணிக்கப்பட்டுவருகின்றன.

“அவசியம் ஏற்பட்டால், தடுப்புக் காவல் சட்டமோ, அல்லது வேறு சட்டமோ அவர்கள்மீது பயன்படுத்தப்படும்”

என்று மத்திய உள்துறைத் துணை அமைச்சர் வி. சி. சுக்லா நாடாளுமன்றத்தில் கூறினுர்.

தமிழக அரசின் வேண்டுகோள்

இன்னும் ஆய்வில்தான் இருக்கிறதாம்!

“சென்னை மாநிலத்தின் பெயரை ‘தமிழ்நாடு’ என்று மாற்றுவதற்காகச் சட்டமியற்ற வேண்டும் என்ற தமிழக அரசின் வேண்டுகோள் மத்திய அரசின் ஆய்வில் இருக்கிறது”

என்று உள்துறை அமைச்சர் சவாண், நாடாளுமன்ற மேலவையில், வி. வி. இராமசாமியின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினுர்.

தமிழக மின் குழு

வேண்டுகோள்

சமீப காலத்தில் தமிழக மின் குழுவுக்குச் சொந்தமான பொருட்கள் சில—குறிப்பாக மின்சாரம் பாயும் செப்புக் கம்பிகள், இடிதாங்கிகள், மற்றும் அதன் சார்புள்ள பொருட்களின் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. மின்சாரத் திருட்டும் அதிகரித்துள்ளது.

தமிழக மின் குழு, மக்களின் பொதுச்சொத்து. இந்த நிறுவனத்தின் விலை மதிப்புள்ள இப்பொருட்களை திருட்டுப் போகாமல் பாதுகாக்க வேண்டியது அனைவரின் பொறுப்பாகும். இத்தகைய திருட்டினுல் பொதுமக்கட்கு மின்சார விநியோகம்கூடத் தடைபெறுகிறது. எனவே, நகரங்களிலும், வயல்வெளிகளிலும், மற்றும் கிராமப்புறங்களிலும் மின் வழிகளில் (லைன்கள்) இருந்து இம்மாதிரித் திருட்டுப் போகாமல் இருக்க சுற்றுப்புறத்திலுள்ள மின்சாரம் உபயோகிப்பவர்களும், பொதுமக்களும் கவனமாகக் கண்காணித்து, இத்தகைய திருட்டுக்களைக் கண்டுபிடிக்கலாம். இத்தகைய தியச் செயல்களில் ஈடுபடுபவர் எவர் மீதாவது சந்தேகப்பட்டால், இந்தத் தகவலை அண்மையில் உள்ள போலீஸ் நிலையத்திலோ, மின்சார அலுவலகத்திலோ தகவல் கொடுத்து உதவுமாறு வேண்டப்படுகிறது.

தமிழக மின் குழு

டில்லியின் அக்கறையற்ற போக்கு

மாமண்டூர் தாமிரப் படிவத்தைத் தோண்டி எடுப்பதில் சுணக்கம்

புதுடில்லி, நவ. 2—

தென்னுற்காடு மாவட்டத்தில் மாமண்டூர் பகுதியில் காணப்படும் தாமிரப் படிவங்களைத் தோண்டி எடுப்பதில் இந்திய அரசாங்க நிபுணர்கள் சுணக்கம் காட்டி வருவது பற்றித் தற்போது தகவல் கிடைத்துள்ளது.

1965-ம் ஆண்டில் ஜப்பான் நிபுணர்கள் தமிழகத்தில் மாமண்டூர்ப் பகுதியிலும், ஆந்திரத்தில் அக்னிகுண்டலாவிலும் தாமிரப் படிவங்கள் படிந்துள்ள இடங்களைப் பார்வையிட்டனர்; ‘இந்த இடங்களில் இன்னும் பூமியை ஆழமாகத் தோண்டி, புதைந்துள்ள தாமிரப் படிவங்கள் அளவு எவ்வளவு என்பதை ஆராயவேண்டும்’ அப்போதுதான், தரமான தாமிரம் கிடைக்குமா?—எவ்வளவு காலத்திற்குத் தாமிரப் படிவங்கள் கிடைக்கும்?—தாமிரக் கனிகளிலிருந்து தாமிர உலோகத்தைப் பிரித்தெடுக்க எந்த முறையைக் கையாளுவது எளிது — என்பதையெல்லாம் திட்டவட்டமாக நிர்ணயிக்க இயலும்; அதன் பின்னரே, சுரங்க அளவு — தொழிற்சாலையின் அளவு ஆகியவற்றை முடிவு செய்ய முடியும்’ என்று ஜப்பான் நிபுணர்கள் கூறியிருந்தார்கள்; ஆனுல் இது குறித்து இந்திய அரசாங்கமும் சரி — சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் சரி—எவ்வித அக்கறையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

ஜப்பான் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்படி, இங்கு தாமிரத் தொழிற்சாலை நிறுவ வெளிநாட்டு இயந்திரச் சாதனங்கள் எதுவும் தேவையில்லை; அதிகாரிகள் யாரும் வெளிநாடு சென்று பேச்சு நடத்தவும் அவசியமிருக்காது; எனவேதான், இந்திய நிபுணர்களுக்கு எவ்வித ஆர்வமும் ஏற்படவில்லை போலும்!

இதனுல், மாமண்டூர்ப் பகுதியில் புதைந்துள்ள தாமிரப் படிவங்கள் இன்னும் அப்படியே இருக்கின்றன! அவை எப்போது வெளிவருமோ தெரியவில்லை!

ஆகாத காரியத்துக்குக் கூடுகிருர்களாம்!

லக்னே, நவ. 27—

ஆங்கிலத்தை நீடிப்பதென்று மத்திய அரசு எடுத்துள்ள நிலையை எவ்வாறு எதிர்ப்பது என்பதை ஆராய்வதற்காக, இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த கல்வியமைச்சர்கள், டிசம்பர் 17-ம் நாளன்று இங்கு கூடுவர்.

இந்தி வழங்காத குசராத், பஞ்சாப் ஆகிய மாநிலங்களின் கல்வியமைச்சர்களும் அக்கூட்டத்திற்கு வருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாயை மூடிக்கொண்டிருங்கள்

இந்தி வெறியர்கட்கு நிஜலிங்கப்பா இடித்துரை

“ஆட்சி மொழியாக எந்த மொழியைப் பயன்படுத்துவது என்பது குறித்து அவசரம் கூடாது; காலப்போக்கில் ஆட்சிமொழி உருவாக அவகாசம் அளிக்கப்பட வேண்டும்; இது தொடர்பாக இந்தி மொழி பேசாத மக்களின் கருத்துக்கள் மதிக்கப்பட வேண்டும்”

என்று மைசூர் முதலமைச்சர் நிஜலிங்கப்பா, செய்தியாளரிடம் கூறினுர்.

“ஆங்கிலம் அனைத்துநாட்டு மொழியாதலால், இன்னும் சிறிது காலத்திற்கு—நமது நன்மைக்காக ஆங்கிலம் நீடிக்க வேண்டும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

“நேரு, தலைசிறந்த அறிவாளி; மக்களின் விருப்பத்தை நன்கு அறிந்தவர்; ஆட்சிமொழி தொடர்பாக அவர் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும்; இந்தி மொழி பேசாத மக்களின் விருப்பங்கள் மதிக்கப்பட வேண்டும்; ‘தென்னக மக்கள், இந்தியை ஏற்க வேண்டுமென வடவர்கள் வற்புறுத்தக்கூடாது; இத்துறையில் வெறி கூடாது; இந்தி வெறியர்கள் வற்புறுத்துவதன் காரணமாகவே இந்திக்கு எதிர்ப்பு அதிகரித்துள்ளது; அவர்கள் வாயை மூடிக்கொண்டு மௌனமாக இருந்தால் தென்னுட்டில் இந்திக்கு எதிர்ப்புக் கிளம்பாது; மொழித் துறையில் வெறியே கூடாது” என்றும் அவர் வலியுறுத்திக் கூறினுர்.

பம்பாய்த் தோழர்கட்கு:

பம்பாய் தி.மு.க. தலைமைக் கழகத்துடன்தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:—

தொ. து. அன்புச்செழியன்,
செயலாளர், பம்பாய் தி.மு.க.
தலைமைக் குழு,
அண்ணு இல்லம்,
220/3117, விக்ரொலி—
[தாகூர் நகர்,
பம்பாய்-83.

சட்டமன்றத்தில்...!

[போகாத நிருபர்]

இன்று புதுடில்லி மக்களவையில் வந்திருக்கும் மொழி மசோதாவுக்கான ஒரு துவக்கக் கட்டம், கடந்த சனிக்கிழமையன்று தமிழகச் சட்டமன்றத்தில் காணப்பட்டது.

"தமிழிலும் விஞ்ஞானப் பாடம் கற்பிக்க முயற்சி"—

"தமிழை வளப்படுத்த ஆங்கில அறிவு அவசியம் என்பதை உணர்ந்திருக்கும் கழக அரசின் கருத்து"

ஆகிய இரண்டு நிலைகளையும், கேள்வி நேரத்தின் போது தெளிவுபடுத்தியிருக்கிறார்—கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன்.

'தாய்மொழி' என்ற போதிலும், எல்லாப் பாடங்களையும் தமிழிலேயே உடனடியாக மாற்றிவிட முடியாது—என்பதற்கு, **'100 ஆண்டுகள் கழித்துத்தான் ஜப்பான் தாய்மொழியைப் பாடமொழியாக்குவதில் வெற்றி பெற்றது'** என்பதனை கல்வி அமைச்சர் எடுத்துக்காட்டி யிருப்பது, வடக்கே இந்தியை அவசர அவசரமாகத் திணிக்கத் துணிபவர்களும் சிந்திக்க வேண்டிய உதாரணமாகும்.

தமிழுக்கு இதுவரை இல்லாத முக்கியத்துவத்தை அளித்த நிலையில், ஆங்கிலத்தின் அவசியத்தினைப் பற்றியும் கழக அமைச்சர்கள் அண்மைக்காலமாகப் பேசிவந்திருப்பதனைத் திரித்து, 'கழக ஆட்சியில் தமிழுக்கு இடமில்லை' என்ற இமாலயப் பொய்யைத் தங்கள் கட்சியினர் கட்டவிழ்த்துவிட்டதனையும் மறந்துவிட்டு, திரு. விநாயகம்.

"ஆங்கிலம் உலக மொழி; உலக அறிவுக்கு அது அவசியம்; அப்படியிருக்கும் போது, கல்லூரிகளில் தமிழைப் பாடமொழியாக்க அரசு ஏன் அவசரப்பட வேண்டும்?"

எனக் கேட்டிருப்பதனை, 'இரட்டை நாக்கு' என்று நாம் கொண்டுவிடலாம்; ஆனால் இது, 'விநாயகத்தின் தனிக் கருத்தா' என்பதனைக் காங்கிரசுக்காரர்கள் தெளிவுபடுத்துவது நல்லது!

'கேட்க வேண்டுமே' என்பதற்காகக் கேட்கப்படும் கேள்விகள், தரவேண்டிய பதில்களை—தக்க விலையுடன்தான் பெற்றுத் தரும்!

"கல்வித் துறை மாற்றங்கள் மாணவர்களைக் கேட்டுச் செய்யப்படுகிறதா?"

"கோடம்பாக்கத்தின்மீது போலீசுத் துறைக்கு இத்தகைய பிரியம் ஏற்படக் காரணம் என்ன"

"கழக அரசை ஆதரிக்கும் பெரியார், தமிழைக் 'காட்டுமிராண்டி மொழி' என்றிருக்கிறாரே தெரியுமா? அதுபற்றிய கருத்து என்ன?"

என்பன போன்ற கேள்விகளுக்கு, காங்கிரசு உறுப்பினர் விநாயகம், தக்க 'விலை' கொடுத்து உரிய பதிலைப் பெற்றிருக்கிறார்!

சனிக்கிழமையன்று கேள்வி நேரத்தின் மற்றொரு பகுதி, திரைப்படங்களின் நிலை பற்றியதாக இருந்திருக்கிறது; செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, திரைப்படத் தணிக்கையிலும், மாநில அரசுகளின் அதிகார பலமின்மையை அனைவரும் புரிந்துகொள்ளும்படி எடுத்துரைத்திருக்கிறார்.

சினிமாவில் வரும் காட்சிகளைத் தணிக்கை செய்யும் உரிமை, மத்திய அரசின் 'சென்சார்' போர்டுக்கு உள்ளது.

"அக்காட்சிகளைத்தான் வெளியே படங்களாகப் போடுகிறோம்; திரைப்படத்தில் வருவது சுவரொட்டியில் இருப்பதால், அதனை மட்டும் 'ஆபாசம்' எனத் தடுப்பது என்ன தர்மம்?" என்ற படத் துறையினர் முறையீட்டுக்கு, பதில் சொல்ல முடியாத நிலையில் இருப்பதும் அமைச்சரால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது!

'எது ஆபாசம்' என நிர்ணயிக்கும் குழுவில், இங்கிருக்கும் ஒருவர்கூட இடம் பெறாததால் வந்த குழப்பம் இது! அண்மையில் புதுடில்லிக்குச் சென்றிருந்தபோது, செய்தித் துறை அமைச்சர், இக்குறைபாட்டினைப் போக்குவதற்கும் ஆவன செய்துவிட்டு வந்திருப்பது, கேள்வி நேரத்தின் போது விளக்கப்பட்டிருக்கிறது!

இரண்டாம் நாள் நடந்த மின்சாரத் துறை அறிக்கை மீதான விவாதத்தில், 16 கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டு, கருத்துக்களையும், பாராட்டுதல்களையும் கோரிக்கைகளையும் வழங்கியிருக்கின்றனர்!

மின்சாரத் துறையின் சாதனைகள் பற்றி **எஸ். முருகையன்** மனமாரப் புகழ்ந்தது—'அவரது வட ஆற்காடு மாவட்டத்துக்கான எஞ்சியிருக்கும் வேலைகளையும் விரைவில் முடிக்கவேண்டும் என்ற ஆசையையும் அப்படியே தெரிவித்துக்கொள்வதற்காகத்தான்' என்பது உரையின் முடிவில் தான் தெரிந்தது!

'மின்சாரத் துறை ஊழியர் பிரதிநிதிகளும் மின்சாரக் கழகத்தில் இடம் பெறவேண்டும்' என்றும், 'விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் இலவச மின்சாரம் விளை நிலங்களுக்கு வழங்கப்பட வேண்டும்' என்றும் திருச்சி **ஆர். நாகசுந்தரம்** யோசனை தந்திருப்பது, முற்றிலும் புதிய கருத்துத்தான் என்றாலும், சாத்தியக்கூறுகளை அனுசரித்து வர வேண்டிய ஒன்றுதான்!

"மொத்தம் உற்பத்தியாகும் மின்சார விசையில் 17 சதவிகிதம், பல்வேறு வகைகளில் 'களவு' போய் வீணாகிவிடுகிறது; இதுபற்றி ஆவன செய்ய வேண்டும்" என்ற கவனத்தைக் கவரும் குறைபாட்டினைத் தெரிவித்திருக்கிறார்—ஈரோடு **மு. சின்னசாமி.**

நெய்வேலி மின்சார விநியோக விலையில், ஒத்துப் போகாத போக்கினைக் காட்டும் மத்திய அரசின் கண்களைத் திறக்கும் வகையில், நெய்வேலி அனல் மின்சாரத்தினைத் தமிழக அரசே ஏற்க வேண்டும்' என்ற வேண்டுகோளை விடுக்கும் இரண்டாவது கழக உறுப்பினராகத் திகழ்கிறார்—**என். இராசாங்கம்.**

"விவசாயத்துக்குக் சளைத்ததுமல்ல—குறைந்ததுமல்ல சிறு தொழில்கள்; எனவே, அவைகளுக்கும் விநியோகத்தில் சிறப்புச் சலுகைகள் வேண்டும்" எனக் கேட்டிருக்கிறார் **பி. பெரியசாமி.**

விவசாயத்துக்கு மின்சாரம் புதிதாக வழங்கப்படுவதிலும், ஏற்கனவே வழங்கப்பட்டு விநியோக முறையை அமுல் நடத்துவதிலும் தங்கள் தங்கள் தொகுதிகளின் தேவைகளைத் தெரிவித்துள்ளவர்களின் வரிசையில்—கொளத்தூர் **கோதண்டம், ஏ. ஜி. பாலகிருஷ்ணன், என். தர்மலிங்கம், எம். சுப்பிரமணியம்** ஆகியோர் வருகின்றனர்.

"கிராமப்புற மின்சார விநியோகத்தில் அடிக்கடி ஏற்படும் 'தடை' அல்லது 'குறைந்த அளவு', விவசாயத்தினை மட்டுமல்லாது அதற்கு அடிப்படையான 'பம்பு செட்'டுகளையும் பழுதுபடச் செய்கின்றன" என்ற முக்கிய குறைபாட்டினைத் தெரிவித்திருக்கும் **கா. வேழவேந்தன், புலவர் முருகையன்** ஆகியோர், உழவர் பெருமக்களின் பாராட்டுதலுக்குரியவர்களாகின்றனர்!

"கிராமப்புற மின்சார விநியோகத்துக்கு அந்தந்த வட்டாரத்துப் பிரதிநிதிகள் அடங்கிய ஓர் அறிவுரைக் குழு அமைப்பது நல்லது" என்ற **எஸ். துரைசாமி** அவர்களின் யோசனை நல்ல பயனைத் தரக்கூடிய ஒன்று!

"மின்சாரத் துறையின் தேவைகளுக்கான பொருள்களை அக்கழகம் வெளி மாநிலங்களில் சென்று வாங்க வேண்டியதில்லை" என்ற **சா. பெ. மலைச்சாமி** அவர்களின் கருத்தும், 'பெரும் அளவுக்குத் தேவைப்படும் சாதாரணப் பொருள்களை மின்சாரத் துறையே தயாரிக்கலாம்' என்ற **முத்துச்செல்வனின்** யோசனையும், சாத்தியக் கூறுகள் எப்படியிருந்தாலும் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவையே!

கழக அரசின் உறுதிப்பாடான முயற்சியால், 'ஆழ் கடல் துறைமுக'த்தைப் பெற்றுவிட்ட களிப்பில் தூத்துக்குடி **எம். எஸ். சிவசாமி,** 'அனல் மின்சாரத்தினையும் என்னுடைய பகுதி பெற்றாக வேண்டும்' என்று விரும்பியிருக்கிறார்!

"திரைப்படக் கொட்டகைகளுக்குத் தரப்படும் மின்சாரத்தை வேண்டுமானாலும் குறைத்துக் கொண்டு, விவசாய உற்பத்திக்குத் தங்கு தடை இல்லாமல் விநியோகிக்க வேண்டும்" என்று **ஏ. ஆறுமுகம்** விரும்பியிருப்பதனை, சினிமாவின் மீதான வெறுப்பாகக் கொண்டுவிடக்கூடாது; ஏனெனில், புரட்சி நடிகரே, 'சினிமாவுக்குப் போவதைக் குறைத்துக்கொண்டாவது, சிறு சேமிப்புக்கு ஊக்கம் காட்டுங்கள்' என்றுதானே கூறியிருக்கிறார்!

மின்சாரத் துறை விவாதத்தில், சட்டமன்றத்துக்கு உள்ளே மட்டுமல்ல—வெளியே இருந்த அனைவரது சிறப்பான கவனத்துக்கும் ஆளாகியிருக்கும் உறுப்பினராக டாக்டர் ஹாண்டே இருந்திருக்கிறார்!

அவரது உரைக்கு 'முடிவுரை' அளித்த திறமை, முதலமைச்சர் அண்ணா அவர்களையே சாரும்!

"பெரும் தொழில் நிறுவனங்களுக்குக் குறைந்த விலை மின்சாரம் ஏன்?

மின்சாரத்துறை ஊழியர்களுக்குத் தொழிலாளர் உரிமைகள் மறுக்கப்படுவதேன்?"

என்ற இரண்டு அடிப்படைக் கருத்துக்களில் பேசிய டாக்டர் ஹாண்டேயின் முயற்சிக்கு முதல் பாராட்டு, முதலமைச்சரிடமிருந்தே கிடைத்திருக்கிறது!

"தவறாக ஏதேனும் சொல்லியிருந்தால் வருந்துகிறேன்" என முடித்து அமர்ந்த ஹாண்டேயை அடுத்து எழுந்து பேசிய அண்ணா அவர்கள்,

"சுதந்தரக் கட்சி உறுப்பினரின் பேச்சு மனதைப் புண்படுத்தவில்லை — மகிழ்ச்சி கொள்ளவே செய்கிறது; இதுதான் சுதந்தரக் கட்சியின் கொள்கை என்றால், இதுவரையில் இருந்த ஒரு தவறான கருத்தை இன்று அகற்றிய பெருமைக்கு உரியவராகிறார் டாக்டர் ஹாண்டே"

என ஒரு பிற்சேர்க்கை தந்திருப்பது, அரசியல் பார்வையாளர்களின் 'சிந்தனைச் சிறை'யில் பதியக்கூடிய வாதமாகும்!

தமிழில் பாட நூல்கள் மொழிபெயர்ப்பு

டெல்லியின் நிதியுதவி கிடைத்தபின் நடவடிக்கை

சென்னை, நவ. 25—

"எல்லா நிலைகளிலும் எல்லாப் பாடங்களையும் வட்டார மொழியிலேயே கற்பிக்கப் பாடப் புத்தகங்களை மொழிபெயர்க்க ஆகும் செலவை ஈடுகட்ட மத்திய அரசிடமிருந்து பெருமளவில் அரசு நிதி உதவி பெறுகிறதா?" என்று சட்டமன்றத்தில், கே. விநாயகம் கேட்ட கேள்விக்கு 'இல்லை' என்று பதிலளித்தார்—கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன்.

கே. விநாயகம் :—"உங்கள் கட்சியை ஆதரிக்கும் ஒரு பெருந் தலைவர், தமிழை, 'காட்டுமிராண்டி மொழி' என்று கூறிவிட்டதால், தமிழில் மொழி பெயர்க்கவேண்டாம் என்ற உத்தேசமா?"

அமைச்சர் :— "காட்டுமிராண்டி என்று கூறியதாக நீங்கள் குறிப்பிடும் தலைவர், இதுவரை உங்களோடுதான் இருந்தார்; அவர் எங்களை ஆதரிப்பதாகக் கூறினாலும், அவருக்கும்--எங்களுக்கும் கொள்கையில் பல கருத்து வேறுபாடுகள் இன்றும் உள்ளன; சில கருத்துக்கள்தான் எங்களை ஒட்டிவருகின்றன; அவர் இப்போதுகூட உங்கள் தலைவர் காமராசரை ஆதரித்துத்தான் பேசிவருகிறார்.

"தமிழில் பாடங்களை மொழி பெயர்க்க இப்போது மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெறவில்லை என்றுதான் சொன்னேன்; இதற்காக ஒரு கோடி ரூபாய்வரை ஒதுக்கியதாக மத்திய நிதியமைச்சர் கூறியிருக்கிறார். மேலும், வட்டார மொழியில் மொழிபெயர்ப்புச் செய்வதற்காக ரூ. 18 கோடிவரை ஒதுக்கவும் மத்திய அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. மத்திய அமைச்சர் ஒப்புக்கொண்டபடி நிதி வராததால், இங்கு அதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. முதலில் அந்த ஒரு கோடி ரூபாய் வரட்டும்—அதன் பிறகு நாம் அதற்கு ஆவன செய்வோம்."

அரசு உத்தரவை எதிர்த்து வழக்கு

உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி

சென்னை, நவ. 25—

"பனைவெல்லம், நாட்டுச் சர்க்கரை ஆகியவைகளை வடாற்காடு மாவட்டத்திலிருந்தும் தமிழகத்திலிருந்தும், வெளியே விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டும்" என்ற மனுவை, உயர் நீதிமன்ற நீதிபதி பி. எஸ். கைலாசம் தள்ளுபடி செய்தார்.

உணவு வழங்கு துறை ஆணையரிடமிருந்து தனி அனுமதி பெற்றவர்கள் தவிர, மற்றவர்கள், மாவட்டங்களுக்கு வெளியே பனைவெல்லம், நாட்டுச் சர்க்கரை ஆகியவைகளை விற்பனை செய்வதைத் தடை செய்து அக்டோபர் 30-ம் நாள் தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

29-ந் தேதியன்று கூடவிருக்கும் சட்டமன்றத்தில், தனது சனநாயக முன்னேற்றக் கட்சியின் நிர்வாகத்தை முறையாகத் துவக்க இருக்கிறார்!

"டாக்டர் கோஷ் தலைமையில் வந்திருக்கும் அமைச்சரவைக்கு ஆதரவு தருவதில், காங்கிரசில் கருத்து வேறுபாடு வலுத்திருக்கிறது"

என்ற செய்தியினை மறுக்கும் வகையில்தான், அதுல்யா கோஷ், மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.

வங்காளத்துக் காங்கிரசில் அதுல்யாவின் செல்வாக்கைத் தகர்ப்பதற்காக ஆரம்பிக்கப் பட்ட நந்தாவின் திட்டம், எப்படியெல்லாமோ வளர்ந்து —கடைசியில் அதுல்யாவுக்கு மேலும் செல்வாக்கு வளரும் வகையில் முடிந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

28--11--67

பசுவனுபுரம்

தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு ஈசுவரன்கோயில் திடலில்; தலைவர் : ஈ. வி. இராமசாமி; பேசுவோர் : திருவை அண்ணாமலை, ஜி. பி. வெங்கிடு எம்.சி., பி. கே. பழனியப்பன், எஸ். ஜி. கண்ணப்பா, எஸ். கே. சுப்பிரமணியம், இரா. பாலகோபால், கிவக்கொழுந்து, கே. ஜி. நஞ்சப்பன்.

29--11--67

தாழைக்கொம்புபுதூர்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; பேசுவோர் : திருவை ஆ. அண்ணாமலை, ஜி. பி. வெங்கிடு எம்.சி., பி. கே. பழனியப்பன், ந. செ. சுப்பிரமணியம்.

உணவு அமைச்சர்

கே.ஏ. மதியழகன் சென்னை திரும்பினார்

விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு

சென்னை, நவ. 27—

உலக உணவு மாநாட்டுக்காக ரோமுக்குச் சென்றிருந்த தமிழக உணவமைச்சர் கே. ஏ. மதியழகன், நவ. 25-ம் நாள் பிற்பகல், சென்னை வந்தடைந்தார்.

விமான நிலையத்தில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றார்.

மற்றும் அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி, மா. முத்துசாமி, சட்டமன்ற அவைத் தலைவர் ஆதித்தனார், மேயர் இரா. சம்பந்தம் மன்னை நாராயணசாமி, நீல நாராயணன், மற்றும் பல்லாயிரக் கணக்கான கழகத் தோழர்களும், மாநகராட்சி மன்ற உறுப்பினர்களும் கழகச் சட்டமன்ற—மேலவை உறுப்பினர்களும் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

'ஆளை விடுங்கள்' என்கிறார் நிஜலிங்கப்பா!

அ. இ. காங்கிரசுத் தலைவர் பதவி--அவருக்கும் வெறுக்கிறது

"புதுடில்லியிலிருந்து காங்கிரசு மேலிடம் கடைசி நிமிடம்வரை என்னை வற்புறுத்தியது உண்மைதான்; ஆனால், காங்கிரசுத் தலைவர் பதவி எனக்கு விருப்பமில்லாத ஒன்று என்பதை உறுதியாகத் தெரிவித்துவிட்டேன்"

என மைசூர் முதலமைச்சர் நிஜலிங்கப்பா, பெங்களூரில் கூறியிருக்கிறார்.

"'முதலமைச்சர் — காங்கிரசுத் தலைவர்' என்ற இரண்டு பதவிகளில், முன்னதையே நான் விரும்புகிறேன்" என அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இந்தச் சீரமைப்புக் குறித்து ஆலோசித்துக் கருத்தறிவிக்க சில குழுக்கள் மத்திய அரசிலேயே வேலை செய்துகொண்டிருப்பதாகவும் அண்ணா அவர்கள் கூறினார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13 அச்சிட்டு வெளியிடப்படுகிறது.)